**கவனிக்க -** 09.01.2026 ஆந் திகதிய 2471 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 2472 - 2026 ජනවාරි මස 16 වැනි සිකුරාදා - 2026.01.16**
2472 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு சனவரி மாதம் 16 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி IV (ஆ) – உள்ளூராட்சி

| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | - |
| துணைவிதிகள் | - |
| உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் | |
| கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | |
| வரவு செலவுத் திரட்டுகள் | - |
| வரவு செலவுக் கூற்றுகள் | - |
| ஆதன விற்பனைகள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி - வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைத் திருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** அதாவது 2026, பெப்புருவரி மாதம் 06 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2026, சனவரி மாதம் 23 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**எஸ். டீ. பாண்டிகோராள,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2026 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

777 - B82755 - 5403 (2026/01)

# பதவிகள் - வெற்றிடம்

## நிக்கவெரடிய பிரதேச சபையில் வெற்றிடமாகி உள்ள பதவிகளுக்கு சேவை ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை ஆட்சேர்ப்பு செய்தல்

நிக்கவெரடிய பிரதேச சபையில் வெற்றிடமாகியுள்ள பின்வரும் பதவிகளுக்கு பொருத்தமானவர்களை தேர்ந்தெடுப்பதற்காக குறித்த தகைமையை உடைய நிக்கவெரடிய பிரதேச சபை அதிகாரப் பிரிவில் 03 வருடங்களுக்கும் மேலாக நிரந்தர குடியிருப்பாளர்களாக உள்ள தகுதிவாய்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

இப் பதவி அன்றாட கொடுப்பனவு அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படும் பதவியாகும். இப் பதவிக்கு பின்வரும் அடிப்படைத் தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

**01. சாரதி - (PL 3 10/2025) வெற்றிட எண்ணிக்கை - 01**

- சம்பள அளவு -
  அரசாங்க நிருவாக சுற்று நிருபம் 10/2025 திருத்தத்திற்கு அமைய இப் பதவிக்கு உரித்துடைய மாதாந்த சம்பளமாவது ரூ. 42,730.00 மற்றும் வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு ரூ. 17,800 உடன் ரூ. 60,580.00 ஆகும்.

- ஆட்சேர்ப்பு செய்வதற்கான தகைமை -

  i. வயது - பதவிக்காக விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதிக்கு 18 வயதுக்கு குறையாமலும் 35 வயதுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.

  ii. கல்வித் தகைமை - கல்வி பொதுத் தராதர (சா. தர) பரீட்சையில் இரண்டு அமர்வுக்கு மேற்படாதவாறு சிங்களம், தமிழ் உற்பட 02 திறமைச் சித்தியுடன் 06 பாடங்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

  iii. தொழில்நுட்ப திறன்கள் மற்றும் அனுபவம் - மோட்டார் போக்குவரத்து ஆணையாளரினால் வழங்கப்பட்ட திறன் தொடர்பான சான்றிதழைப் பெற்றிருக்க வேண்டும் (A வகுப்பில் சாரதி உரிமப்பத்திரம்)

  iv. அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் தொடர்புடைய துறையில் மூன்று வருட அனுபவம் (சேவைச் சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்த வேண்டும்.)

- சவிண்ணப்பப் படிவம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி - 2026.01.31ஆகும்

**02. கள தொழிலாளி வெற்றிடங்கள் - 04 (PL - 1 - 25/2010)**

- சம்பள அளவு

  அரசாங்க நிருவாக சுற்று நிருபம் 10/2025 திருத்தத்திற்கு அமைய இப் பதவிக்கு உரித்துடைய மாதாந்த சம்பளமாவது ரூ. 40,000.00 மற்றும் வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு ரூ. 17,800.00 உடன் ரூ. 57,800.00 ஆகும்.

- கல்வித் தகைமை -

  அரசாங்க பாடசாலை ஒன்றில் 8 ஆம் தரம் (9 ஆம் ஆண்டு) சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

- வயது எல்லை - 18 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாதிருத்தலும் வேண்டும்.

**03. அலுவலக பணி உதவியாளர் - (வெற்றிடங்களின் எண்ணிக்கை - 01)**

- சம்பள அளவு

அரசாங்க நிருவாக சுற்று நிருபம் 10/2025 திருத்தத்திற்கு அமைய இப் பதவிக்கு உரித்துடைய மாதாந்த சம்பளமாவது ரூ. 40,000.00 மற்றும் வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு ரூ. 17,800.00 உடன் ரூ. 57,800.00 ஆகும்.

- கல்வித் தகைமை -

கல்வி பொதுத் தராதர (சா.த.) பரீட்சையில் இரண்டி அமர்வுக்கு மேற்படாதவாறு 02 திறமைச் சித்தியுடன் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

- வயது எல்லை - 18 வயதுக்கு குறையாமலும் 45 வயக்கு மேற்படாதிருத்தலும் வேண்டும்.

விண்ணப்பதாரிகள் நல்லொழுக்கம் உடையவர்களாகவும், நல்ல உடல் ஆரோக்கியம் கொண்டவர்களாகவும் இருக்க வேண்டும்.

**04. ஆட்சேர்ப்பு செய்யும் முறை**

விண்ணப்பப் படிவங்களை சமர்ப்பிக்கும் சந்தர்ப்பங்களில் அல்லது இடைப்பட்ட காலத்தில் அல்லது ஆட்சேர்ப்பு செய்வதை காலதாமதப்படுத்துவதற்கு அல்லது அறிவித்தலை இரத்து செய்வதற்கு அல்லது திருத்தம் செய்வதற்கான அதிகாரம் நிக்கவெரட்டிய பிரதேச சபையின் செயலாளருக்கு உரித்துடையதாகும்.

**05. விண்ணப்பிக்க வேண்டிய முறை**

01. இவ் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி படிவத்தின் படி தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தை 2026.01.31 ஆந் திகதிக்கு அல்லது அத் திகதிக்கு முன் “செயலாளர், பிரதேச சபை, நிக்கவெரடிய” என்ற முகவரிக்கு கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். விண்ணப்பப் படிவத்தை இடுகின்ற கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கின்ற பதவியை தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும்.

02. விண்ணப்பப் படிவம் A 4 அளவிலான கடதாசிகளில் சமர்பிக்க வேண்டும். பூர்த்தியற்ற விண்ணப்பப் படிவங்கள் மற்றும் குறிப்பிடப்பட்ட திகதிக்கு பின்பு கிடைக்கப்பெறும் விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படும்.

03. விண்ணப் பத்துடன் அலுப்பப்பட வேண்டிய ஆவணங்கனின் பிரதிகள்.

1. பிறப்புச் சான்றிதழ்
2. கல்விச் சான்றிதழ்
3. வசிப்பிடம் தொடர்பாக கிராம அலுவலர் பிரதேச செயலாளரின் மேல் ஒப்பச் சான்றிதழ்
4. சமீபத்தில் பெறப்பட்ட இரண்டு நற்சான்றிதழ்கள் (ஒரு சான்றிதழ் கிராம அலுவலர்டத்தில் இருந்து பெறப்பட்டதாக இருக்க வேண்டும்)
5. அனுபவம் தொடர்பான சான்றிதழ்
6. தொழில் தகைமை தொடர்பான சான்றிதழ்

செயலாளர்,
நிக்கவெரடிய பிரதேச சபை.

## மாதிரி விண்ணப்பப் படிவம்

நிக்கவெரடிய பிரதேச சபையில் ……………………………………………………………………பதவிக்கான விண்ணப்பப் படிவம்.

01. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் : ………………………………………………………………………………
(ஆ) முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள்: ………………………………………………………………………………

02. சுய முகவரி : ………………………………………………………………………………

03. (அ) பிறந்த திகதி ஆண்டு : ………………… மாதம் :…………………… திகதி:……………………
(ஆ) 2025.12.31 ஆந் திகதிக்கு வயது வருடங்கள்: …………… மாதங்கள் :………………… நாட்கள் :………………

04. தேசிய ஆளடையாளட்டை இலக்கம் : ………………………………………………………………………………

05. பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் கிரா அலுவலர் சேவகர் பிரிவு : ………………………………………………..

06. நீங்கள் இலங்கை பிரசையா அவ்வாறாயின் பரம் பரையாகவா அல்லது பதிவு மூலமா : …………………………

07. ஆண் /பெண் தன்மை : ………………………………………………………………………………

08. திருமணமானவர்/ திருமணமாகாதவர் பற்றி :………………………………………………………………………..

09. கல்வித் தகைமை : ………………………………………………………………………………
கல்வித் தகைமை – க.பொ.த.( சா.தர ) பரீட்சை - பரீட்சை இலக்கம் ………….. ஆண்டு …………………………

| பாடங்கள். | சித்தி. | பாடங்கள். | சித்தி. |
|---|---|---|---|
| ……………………………… | ………… | ……………………………………… | ………… |
| ……………………………… | ………… | ……………………………………… | ………… |
| ……………………………… | ………… | ……………………………………… | ………… |
| ……………………………… | ………… | ……………………………………… | ………… |

10. தொழில் திறமை (உரிய பதவிக்காக மாத்திரம்)
பெற்றுக்கொண்ட நிறுவனம் :………………………………………………………………………………
பெற்றுக்கொண்ட சான்றிதழ் :………………………………………………………………………………

11. தொழில் தகைமை மற்றும் அனுபவம் :………………………………………………………………………………

12. உங்களுக்கு நீதிமன்றத்தினால் தண்டனை விதிக்கப்பட்டுள்ளதா:………………………………………………………

13. அவ்வாறாயின், தண்டனையின் தன்மை :………………………………………………………………………………

இந்த விண்ணப்பப் படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவையும் சரியானதும் என்று உறுதிப்படுத்துகின்றேன். இங்கு உள்ளடக்கப்பட்டுள்ள தகவல்கள் பொய்யானவை அல்லது பிழையானவை என்று இப் பதவிக்கு என்னை தேர்ந்தெடுப்பதற்கு முன் தெரியவந்தால் தகைமையற்றவர் என்றும், இப் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட பின் தெரியவந்தால் எவ்வித இழப்பீடும் இன்றி பணி நீக்கம் செய்யப்படுவதற்கு உடன்பட வேண்டும் என்பதை நான் புரிந்து கொள்கின்றேன்.

……………………………….

திகதி :…………………… விண்ணப்பதாரியின் கையொப்பம்.

01-216

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

## கெஸ்பேவ மாநகர சபை

### 1939 ஆம் ஆண்டின் மாநகர சபை கட்டளைச் சட்ட இல. 61 இன் 255 பிரிவு 52ன் கீழ் அறிவிப்பு

255 1939 ஆம் ஆண்டின் மாநகர சபை கட்டளைச் சட்ட இல. 61 இன் பிரிவு 52 இன் அடிப்படையில் மேல்மாகாணத்தின் கொழும்பு மாவட்டம், கெஸ்பேவ பிரதேச செயலகத்தின் கெஸ்பேவ மாநகர சபையின் எல்லைக்குள் அமைந்துள்ள இணைக்கப்பட்ட அட்டவணையில் 1 முதல் 4 வரையான இலக்கம் கொண்ட வீதிகள் கெஸ்பேவ மாநகர சபைக்கு சொந்தமானவை மற்றும் கட்டுப்பாட்டில் உள்ளவை என்பது மக்களின் அறிவுக்காக பிரசுரிக்கப்படுகிறது.

| *தொடர் இல.* | *தெருவின் பெயர்* | *சாலையில் நீளம்* | *சாலையில் அகலம்* | *இறுதி மதிப்பீடு இல.* | *இறுதி மதிப்பீடு இல.* |
|---|---|---|---|---|---|
| 1 | 585 ஹொன்னந்தர வடக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் சமூப்பக்கார மாவத்தையில் வரிபண இல. 125 ஆம் வீட்டிலிருந்து ஆரபிக்கின்றதும் வரிபண இல. 133/04 ஆம் வீட்டில் இல. வீதி முடிவடைகின்றதுமான சிசில பெதெச வீதி | 69.5 மீற்றர் | 3.30 மீற்றர் | 125 | 133/04 |
| 2 | 569 மாகந்தனை கிழக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் வரிபண இல. 21/9 ஆம் வீட்டிலிருந்து ஆரம்பிக்கின்றதும் வரிபண இல. 21/15 ஆம் வீட்டில் முடிவடைகின்றதுமான “நெலும் மாவத்தை” வீதி | 90 மீற்றர் | 4.5 மீற்றர் | 21/9 | 21/15 |
| 3 | 580ஏ நிவந்திடிய கிராம உத்தியோகத்தர் பிரிவில் வரிபண இல. 88/05 ஆம் வீட்டிலிருந்து ஆரபிக்கின்றதும் வரிபண இல. 88/04 ஆம் வீட்டில் முடிவடைகின்றதுமான “பிலவர் ரோட்” வீதி | 60 மீற்றர் | 3.6 மீற்றர் | 88/05 | 88/04 |
| 4 | 596 பட்டுவந்தரை வடக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் வரிபண இல. 20/14 ஆம் வீட்டிலிருந்து ஆரபிக்கின்றதும் வரிபண இல. 20/45 ஆம் வீட்டில் முடிவடைகின்றதுமான “மூணமல்கஹவத்தை” துணை வீதி | 73 மீற்றர் | 4.6/3.05 மீற்றர் | 20/041 | 20/045/A |

தலைவர்,
கெஸ்பேவ மாநகர சபை.

கெங்பேவ மாநகர சபை அலுவலகம்,
2025 திசெம்பர் 31.

01-219

---

## மாடறுக்கும் கட்டளைச் சட்டம் - கண்டி மாநகர சபை

மாடறுக்கும் கட்டளைச் சட்டத்தின் (272 ஆம் அதிகாரம்) இல. 17(1) பந்தியின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் படி கண்டி மாநகர பிதா, ஆரச்சி படபெதிகே சந்திரசிரி விஜேநாயக்க ஆகிய என்னால் 2026 ஆம் ஆண்டில் கண்டி மாநகர எல்லைக்குள் கீழே காட்டப்பட்டுள்ள முதலாம் மற்றும் இரண்டாம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிகளில் மற்றும்

விசேட காரணங்களுக்காக அரசினாலும் என்னாலும் கட்டளையிடப்படுகின்ற வேறு திகதிகளிலும் இறைச்சிக்காக விலங்குகளை கொல்லுதல், இறைச்சி விற்பனை செய்தல், இறைச்சி விற்பனை செய்வதற்காக காட்சிப்படுத்தல் மட்டுமன்றி இறைச்சி வகைகளை விற்பனை செய்யும் இடங்களை திறந்து வைத்திருத்தல் போன்றன முற்று முழுதாக தடை செய்யப்பட்டுள்ளது. என்பதனை நான், இத்தால் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஆரச்சி படபெதிகே சந்திரசிரி விஜேநாயக்க
மாநகர முதல்வர்.

நகர சபை அலுவலகம்,
கண்டி.
2025 திசெம்பர் 31.

**அட்டவணை**

| | | | |
|---|---|---|---|
| சனவரி | 03 | சனிக் கிழமை | துருத்து முழு நோன்மதி தினம் |
| பெப்புருவரி | 01 | ஞாயிற்றுக் கிழமை | நவம் முழு நோன்மதி தினம் |
| மாச்சு | 02 | திங்கட் கிழமை | மெதின் முழு நோன்மதி தினம் |
| ஏப்பிறல் | 01 | புதன் கிழமை | பக் முழு நோன்மதி தினம் |
| மே | 01 | வெள்ளிக் கிழமை | வெசாக் முழு நோன்மதி தினம் |
| மே | 02 | சனிக் கிழமை | வெசாக் முழு நோன்மதி தினத்திற்கு அடுத்த நாள் |
| மே | 30 | சனிக் கிழமை | முழு பௌர்னமி நோன்மதி தினம் |
| யூன் | 29 | திங்கட் கிழமை | பொசொன் முழு நோன்மதி தினம் |
| யூலை | 29 | புதன் கிழமை | எசல முழு நோன்மதி தினம் |
| ஓகத்து | 27 | வியாழக் கிழமை | நிகினி முழு நோன்மதி தினம் |
| செத்தெம்பர் | 26 | சனிக் கிழமை | பினர முழு சோன்மதி தினம் |
| ஒற்றோபர் | 25 | ஞாயிற்றுக் கிழமை | வப் முழு நோன்மதி தினம் |
| நவெம்பர் | 24 | செவ்வாய்க் கிழமை | இல் முழு நோன்மதி தினம் |
| திசெம்பர் | 25 | புதன் கிழமை | உந்துவப் முழு நோன்மதி தினம் |

**இரண்டாவது அட்டவணை**

| | | | |
|---|---|---|---|
| பெப்புருவரி | 04 | புதன் கிழமை | தேசிய சுதந்திர தினம் |
| மே | 01 | வெள்ளிக் கிழமை | உலக தொழிலாளர் தினம் |
| ஒற்றோபர் | 04 | ஞாயிற்றுக் கிழமை | உலக விலங்குகள் தினம் |

வருடத்தில் அனைத்து மாதத்தினதும் ஞாயிற்றுக் கிழமைகளிலும் மற்றும் மேல் காட்டப்பட்டுள்ள பொது விடுமுறை தினங்களிலும் அதற்கு மேலதிகமாக விசேட காரணங்களுக்காக அரசினாலும் என்னாலும் கட்டளையிடப்படுகின்ற ஏனைய நாட்களிலும் இறைச்சி வகைகளை விற்பனை செய்யும் இடங்கள் திறந்து வைத்திருத்தல் போன்றன முற்று முழுதாக தடை செய்யப்பட்டுள்ளது.

01-221